| | | |
|---|---|---|
| | மாகாணக் கல்வித் திணைக்களம் - வடமாகாணம்<br>**இரண்டாம் தவணைப் பரீட்சை -2023**<br>வரலாறு - II | |

| | | |
|---|---|---|
| தரம் - **11** | **33 \| T \| II** | மூன்றுமணித்தியாலம் |

மேலதிக வாசிப்பு நேரம் 10 நிமிடங்கள்

**வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும் போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

அறிவுறுத்தல் :

- ***பகுதி I இல் வினா இலக்கம் 1 கட்டாயமானது.***
- ***பகுதி II இலிருந்து நான்கு வினாக்களுக்கும் பகுதி III இலிருந்து ஒரு வினாவிற்கும் விடை எழுதுக.***
- ***எல்லாமாக ஆறு வினாக்களுக்கு விடை எழுதுக.***

## பகுதி - I

*1.* (அ) (i) கீழே தரப்பட்டுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் அனைத்தையும் வழங்கப்பட்டுள்ள **இலங்கைப் புறவுருவப் படத்தில்** குறித்துப் பெயரிடுக.

ஊர்காவற்றுறை, மாதோட்டம், கலாஓயா, கோகன்ன,
குருளுவாவி, கோட்டை, சிலாபம், கதிர்காமம்,
சொரபொரவாவி, செங்கடகல, தெதுறுஓயா தெவிநுவர

*(12 புள்ளிகள்)*

(ii) கீழே தரப்பட்டுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் அனைத்தையும் வழங்கப்பட்டுள்ள ஒருபகுதி **உலகப் புறவுருவப்** படத்தில் குறித்துப் பெயரிடுக.

பிரித்தானியா, செங்கடல், சுமாத்திரா,
கல்கத்தா, லிஸ்பன், பாரசீகவளைகுடா *(06 புள்ளிகள்)*

(ஆ) (i) கீழே A, B, C, D எனத் தரப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளை ஒழுங்கு முறைப் படி உங்கள் விடைத்தாளில் எழுதுக.

A - திஸ்ஸமகாராமக் குளத்தை அமைத்த மன்னன்

B - சர்வதேச வியாபார நடவடிக்கைகளில் அதிகளவு இலாபத்தினைப் பெற்றுத் தந்த மாந்தை (மாதொட) சர்வதேச துறைமுகத்தை அக்கால அநுராதபுர ஆட்சியாளனான எல்லாளனிடமிருந்து மீட்டெடுத்தவன்

C - ‘தேவ தூதர்கள்’ என்னும் சித்தரத்தினை வரைந்தவர்

D - பெருந்தெருக்களை அமைக்கும் முறையைக் கண்டறிந்தவரின் பெயர்

*(04 புள்ளிகள்)*

- A, B என்பவற்றில் காட்டப்பட்டுள்ள படங்களை அவதானித்து கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளை வினா இலக்க ஒழுங்கு முறைப்படி உங்கள் விடைத்தாளில் எழுதுக.

**(A)**

(ii) *1.* படம் A யினைப் பெயரிடுக.
*2.* இதனைப் பொறிப்பித்த மன்னனின் பெயர் யாது?
*3.* இது காணப்படும் இலங்கையின் வரலாற்று நகரம் எது?
*4.* இதில் காணப்படும் விலங்கின் பெயர்?
*(04 புள்ளிகள்)*

**(B)**



(iii) *1.* படம் B இல் காணப்படும் நபரின் பெயர் என்ன?
*2.* இவரால் கண்டுபிடிக்கப்பட்ட கருவியின் பெயர் என்ன?
*3.* மேற்படி கருவியுடன் தொடர்புடைய துறை யாது?
*4.* இக் கருவிகளை இணைப்பதற்குப் பயன்படுத்தப் பட்ட பொருள் யாது? *(04 புள்ளிகள்)*

## பகுதி - II

*2.* (i) இலங்கையின் கற்கால மனிதன் வாழ்ந்த **மூன்று** சுற்றாடல் வலயங்களின் பெயர்களைத் தருக. *(03 புள்ளிகள்)*

(ii) வரலாற்றுக்கு முற்பட்டகால மனிதன் வாழ்ந்த
A - தாழ்நில ஈரவலயக் குகைகள் **இரண்டு**
B - தாழ்நில உலர்வலயக் குகைகள் **இரண்டு** என்பவற்றைத் தருக.
*(04 புள்ளிகள்)*

(iii) ஆரம்ப வரலாற்றுக் காலத்திற்கு முன்பே குடியிருப்புக்களின் நிர்வாகம் கட்டுக் கோப்புடன் விளங்கியது என்பதற்கான **இரண்டு** ஆதாரங்களை விளக்குக. *(05 புள்ளிகள்)*

(iv) முன்வரலாற்றுக் காலத்தில் பின்பற்றப்பட்ட மரணச் சடங்கு முறைகளை **மூன்று** காரணிகளின் அடிப்படையில் விளக்குக. *(06 புள்ளிகள்)*

*3.* (i) இலங்கையின் புராதன துறைமுகங்கள் A, B, C எனத் தரப்பட்டுள்ளது. அத்துறை முகங்கள் அமைந்திருந்த **நதிகளின்** பெயர்களைத் தருக.
A - சல்வத்தோட்ட
B - உருவெலகம
C - கலாதித்த *(03 புள்ளிகள்)*

(ii) கீழே A, B, C, D எனத் தரப்பட்டுள்ள கூற்றுக்களுடன் தொடர்புடைய விடைகளை அதே ஒழுங்கில் தருக.
A - சேனைச் செய்கையை வனவிலங்குகளிடமிருந்து பாதுகாப்பதற்காக அதனைச் சுற்றி அமைக்கப்பட்ட வேலி
B - சேனைப் பயிர்ச்செய்கைப் பிரதேசத்தில் உயர் மரத்தில் கட்டப்பட்ட குடிசை

C - சேனைப் பயிர்ச்செய்கைக்காக அரசர்கள் விதித்த வரி

D - சேனைச் செய்கைக்காகப் புதிதாகத் தீயிட்டப்பட்ட காணி *(04 புள்ளிகள்)*

(iii) புராதன அரசர்கள் நாட்டு மக்களுக்கு ஆற்ற வேண்டிய பணிகள் எனக் கருதிய **இரண்டு** விடங்களைக் குறிப்பிட்டு விளக்குக. *(05 புள்ளிகள்)*

(iv) வசப மன்னனின் ஆட்சிக்கால முக்கியத்துவத்தினை **மூன்று** காரணிகளின் அடிப்படையில் விபரிக்குக. *(06 புள்ளிகள்)*

*4.* (i) புராதன காலத்தில் பாரிய குளங்கள் அமைக்கப்பட்டதற்கான **மூன்று** நோக்கங்களைத் தருக. *(03 புள்ளிகள்)*

(ii) புராதன கால விவசாய யுகத்தில் இலங்கையில் பயன்படுத்தப்பட்ட **நான்கு** நிலஅளவீட்டு முறைகளைத் தருக. *(04 புள்ளிகள்)*

(iii) குளம் ஒன்றின் பகுதிகள் கீழே A, B, C எனத் தரப்பட்டுள்ளது. அவற்றின் பயன்களைச் சுருக்கமாக விளக்குக.

A - குளக்கட்டு

B - அலைதாங்கி

C - கலிங்கல் தொட்டி *(05 புள்ளிகள்)*

(iv) புராதன காலத்தில் இலங்கையில் வைத்தியத்துறை வளர்ச்சியடைந்திருந்தது என்பதற்கான **மூன்று** சான்றுகளை விபரிக்குக. *(06 புள்ளிகள்)*

*5.* (i) இரண்டாம் நகரமயமாக்கல் கால இராசதானிகள் **மூன்றின்** பெயர்களைத் தருக. *(03 புள்ளிகள்)*

(ii) இரண்டாம் நகரமயமாக்கல் காலத்தில் ஏற்பட்ட **நான்கு** மாற்றங்களைத் தருக. *(04 புள்ளிகள்)*

(iii) இரண்டாம் நகரமயமாக்கல் காலத்தில் நீர்ப்பாசன அமைப்புக்கள் உருவாக்கப் படாமைக்கான **இரண்டு** காரணங்களை விளக்குக. *(05 புள்ளிகள்)*

(iv) இரண்டாம் நகரமயமாக்கல் கால பொருளாதாரப் பண்புகளை **மூன்று** காரணிகளின் அடிப்படையில் விளக்குக. *(06 புள்ளிகள்)*

*6.* (i) கீழே A, B, C எனத் தரப்பட்ட கூற்றுக்களுக்குப் பொருத்தமான விடைகளை ஒழுங்கு முறையாகத் தருக.

A - *1798 - 1802* வரை இலங்கையின் கரையோரப் பிரதேசத்தில் நிலவிய ஆட்சிமுறை

B - *1797* இல் இலங்கையின் கரையோரப் பிரதேசத்தில் ஏற்பட்ட கிளர்ச்சிக்குக் காரணமான வரி

C - *1797* கிளர்ச்சிக்கான காரணங்களைக் கண்டறிவதற்கு நியமிக்கப்பட்ட ஆணைக் குழுவின் தலைவர் *(03 புள்ளிகள்)*

(ii) கீழே A, B, C, D எனத் தரப்பட்ட கூற்றுக்களுடன் தொடர்புடைய பிரித்தானிய ஆளுனர்களின் பெயர்களைத் தருக.

A - இலங்கையின் முதலாவது ஆளுனர்

B - *1815* இல் கண்டி இராச்சியம் பிரித்தானியரால் கைப்பற்றப்பட்ட போது ஆளுனர் பதவி வகித்தவர்

C - *1848* கிளர்ச்சிக்குக் காரணமான ஆளுனர்

D - இலங்கையில் புகையிரதப் பாதை அமைப்பதில் ஆர்வம் காட்டிய ஆளுனர்

*(04* புள்ளிகள்)

(iii) கோல்புறூக் அரசியல் யாப்புச் சீர்திருத்தத்தின் இரண்டு விடயங்களை விளக்குக.

*(05* புள்ளிகள்)

(iv) பிரித்தானியர் இலங்கையின் அரசியல் அதிகாரத்தை நிலைநிறுத்திக் கொள்வதற்கு மேற்கொண்ட மூன்று நடவடிக்கைகளை விபரிக்குக. *(06* புள்ளிகள்)

*7.* (i) கீழே A, B, C எனத் தரப்பட்டவற்றுடன் தொடர்புடைய கூற்றுக்களுக்குப் பொருத்தமான **யாப்புச் சீர்திருத்தங்களின்** பெயர்களைத் தருக.

A - வரையறுக்கப்பட்ட வாக்குரிமை

B - இனவாரிப் பிரதிநிதித்துவம்

C - பிரதேச வாரிப் பிரதிநிதித்துவம் *(03* புள்ளிகள்)

(ii) ஆங்கிலேயரால் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட பெருந்தோட்டப் பயிர்கள் **நான்கு** தருக. *(04* புள்ளிகள்)

(iii) டொனமூர் அரசியல் யாப்புச் சீர்திருத்தத்தில் உள்ளடக்கப்பட்ட **இரண்டு** விடங்களைச் சுருக்கமாக விளக்குக. *(05* புள்ளிகள்)

(iv) இலங்கையின் தேயிலைப் பயிர்ச்செய்கையின் விருத்திக்கு ஏதுவான **மூன்று** காரணிகளை விபரிக்குக. *(06* புள்ளிகள்)

## பகுதி - III

*8.* (i) மறுமலர்ச்சி ஐரோப்பாவில் ஏற்படுவதற்கான **மூன்று** காரணங்களைத் தருக. *(03* புள்ளிகள்)

(ii) மறுமலர்ச்சிக்கால கட்டடக் கலையின் **இரண்டு** பண்புகளைத் தருக. *(04* புள்ளிகள்)

(iii) மறுமலர்ச்சிக் காலத்தில் அரசியலில் ஏற்பட்ட **இரண்டு** மாற்றங்களை விளக்குக.

*(05* புள்ளிகள்)

(iv) மறுமலர்ச்சிக் காலத்தில் பொருளாதாரத்தில் ஏற்பட்ட **மூன்று** மாற்றங்களை விபரிக்குக.


*(06* புள்ளிகள்)


*9.* (i) பிரித்தானியாவில் கைத்தொழிற் புரட்சி முதன் முதலாக ஏற்பட்ட **மூன்று** துறைகளையும் தருக. *(03* புள்ளிகள்)

(ii) *19* ஆம் நூற்றாண்டில் ஏனைய நாடுகளில் கைத்தொழில் புரட்சி பரவுவதில் செல்வாக்குச் செலுத்திய இரண்டு காரணங்களைத் தருக. *(04* புள்ளிகள்)

(iii) கைத்தொழிற் புரட்சியினால் சமூகத் துறையில் ஏற்பட்ட இரண்டு மாற்றங்களை விளக்குக. *(05 புள்ளிகள்)*

(iv) கைத்தொழிற்புரட்சி இலங்கையின் பொருளாதாரத்தில் ஏற்படுத்திய **மூன்று** மாற்றங்களைப் பரிசீலிக்குக. *(06 புள்ளிகள்)*




N
අප්‍රිකාව
ஆபிரிக்கா
Africa
ඉන්දියන් සාගරය
இந்து சமுத்திரம்
Indian Ocean